# குருந்தூர்மலையில் வழிபாட்டுரிமை மறுப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



குருந்தூர்மலையில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமைக்காக பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் கடந்த 14 ஆம் திகதி வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டதுடன், ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பாகவும் மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன், பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன், ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன், ஆகியோரால் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குருந்தூர் மலையில் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக் கிழமையன்று, பிரதோச தினத்தில் சைவத் தமிழ் மக்கள் சிலர் விசேட பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்றபோது பௌத்த துறவிகள் உள்ளிட்ட குழுவினரால் குழப்பம் விளைவிக்கப்பட்டது.

அத்தோடு பொங்கலுக்காக அங்கு தீ மூட்டப்பட்டபோது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் சப்பாத்துக் கால்களினால் மிதிக்கப்பட்டு அது அணைக்கப்பட்டது. வழிபாடுகளை மேற்காள்ள வருகைதந்த தமிழ் மக்களும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும், சமூகச் செயற்பாட்டாளர்களும் பொலிசாரால் தாக்கப்பட்டுமிருந்தனர்.

இந்தநிலையில், குறித்த இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார், அங்கு சைவ வழிபாட்டுரிமையினைத் தடுக்கும் வகையில் செயற்பட்ட பௌத்த தேரர்கள் உள்ளிட்ட குழுவினருக்கு ஆதரவாகச் செயற்பட்ட அதேவேளை, சைவ வழிபாட்டுரிமைகளைத் தடுக்கின்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர் எனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 21 செவ்வாய்க்கிழமை 18.07.2023 கதிர் 31



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்


## பிரேரணையை எதிர்கொள்ளத் தயார்! ஓடி ஒளியமாட்டேன்-கெஹலிய பதில்



எனக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன். ஒருபோதும் ஓடி ஒளியமாட்டேன், என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். 2➤

## சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரத் தீர்மானம் – சஜித் உறுதி

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இன்று காலை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் மற்றும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட காரணங்களுக்காக அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர். (மி)

## சுகாதார அமைச்சர் கெஹெலியவுக்கு எதிராக சமூகச் செயற்பாட்டாளர்கள் போராட்டம்



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக சமூகச் செயற்பாட்டாளர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் இன்றைய தினம் கொழும்பு - சுகாதார அமைச்சுக்கு முன்பாக இடம்பெற்றது.

நாட்டிலுள்ள அரச மருத்துவமனைகளில் தரமற்ற மருந்துப் பொருட்களின் பாவனையால் மர்மமான முறையில் பல மரணங்கள் 2➤



## கனேடிய உயர்ஸ்தானிகர் யாழ் நூலகத்திற்கு விஜயம்

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இன்றைய தினம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டு பார்வையிட்டுள்ளார்.

இதன்போது நூலகத்தில் யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸை வரவேற்று கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பில் யாழ் பொதுசன நூலக நூலகர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## மோடிக்கு சம்பந்தன் அவசரக் கடிதம்

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதம் நேற்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை 2➤

## பாடசாலை முதலாம் தவணை 21 ஆம் திகதியன்று நிறைவு!

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணை ஜூலை 21ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையவுள்ளதாக கல்வி அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், இரண்டாம் தவணைக்கான முதல் கட்டம் எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# களனிப் பாலத்தில் 15 இலட்சத்துக்கும் அதிகமான ஆணிகள் திருட்டு உண்மைகள் வெளிக்கொண்டுவரப்படவேண்டும் - தயாசிறி எம்.பி

களனிப் பாலம் 2021, நவம்பர் 27 ஆம் திகதியன்று திறக்கப்பட்டது. இன்றுடன் இது திறக்கப்பட்டு 599 நாட்கள் ஆகின்றன. இவ்வாறான நிலையில், குறித்த பாலத்தில் 28 கோடி ரூபாய் பெறுமதியான ஆணிகள் திருடப்பட்டுள்ளன, என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போதே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

களனிப் பாலத்தில் 28 கோடி ரூபாய் பெறுமதியான ஆணிகள் திருடப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் நாட்டில் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், இது தொடர்பாக இன்று நாடாளுமன்றின் கவனத்திற்கு அதனை தயாசிறி கொண்டுவந்திருந்தார்.

இந்த விவகாரத்தின் உண்மைத் தன்மையை அமைச்சர் பந்துல குணவர்த்தன சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஒரு நாளைக்கு 100 ஆணிகள் வீதம் திருடப்பட்டிருந்தால், 21 வருடங்களேனும் தேவை இவ்வளவு ஆணிகளைக் கழற்றுவதற்கு. ஆனால், 599 நாட்களில் இவ்வளவு ஆணிகள் கழற்றப்பட்டிருக்குமானால், ஒரு நாளைக்கு 1300 ஆணிகளைக் கழற்றியிருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இங்கிருந்து 28 கோடி ரூபாய் பெறுமதியான ஆணிகள் திருடப்பட்டுள்ளதாக தகவல் ஒன்று வெளி வந்துள்ளது. அதாவது, 8 இலட்சத்து 75 ஆயிரத்து 866 டொலர் பெறுமதியான ஆணிகள் இவ்வாறு திருடப்பட்டுள்ளன. எனவே, 77 இலட்சத்து 92 ஆயிரத்து 402 கிலோ இரும்புகள் இங்கு களவாடப்பட்டுள்ளமை தெரியவருகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

15 இலட்சத்து 58 ஆயிரத்து 480 ஆணிகள், 599 நாட்களில் கழற்றப்பட்டுள்ளன. காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை கழற்றினால்கூட, 10 ஆணிகளைத்தான் இங்கிருந்து கழற்ற முடியும். எனவே,



இந்த விடயத்தின் உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்.

உண்மையில் இங்கு ஆணிகள் கழற்றப்பட்டுள்ளனவா? அல்லது ஆணிகள் பொருத்தப்படவில்லையா? என்பதை உரிய அமைச்சர் சபைக்குக் கூறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## சுகாதாரச் சதி குறித்து ஆராய நிபுணர்கள் குழு நியமிப்பு - கெஹலிய அறிவிப்பு!

தரக்குறைவான மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதாக சிலர் வெளியிட்ட அறிக்கைகள் மற்றும் அண்மைய நாட்களில் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஏழு பேர் கொண்ட உயர் தகுதி வாய்ந்த நிபுணர்கள் குழுவொன்றை நியமித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலவச சுகாதார சேவையில் நம்பிக்கை இழக்க வேண்டாம், என இலங்கை வைத்தியர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் வின்யா ஆரியரத்ன பொதுமக்களிடம் விடுத்த வேண்டுகோளை தாம் பாராட்டுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஏழு பேர் கொண்ட இந்தக் குழுவின் சில உறுப்பினர்களை குழுவில்



இணையவேண்டாம் என அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், இந்தக் குழுவின் உறுப்பினர்கள் மிகச் சரியான தீர்மானத்தை வழங்குவார்கள் என தான் நம்புவதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.




## பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சிக்கூடத்தை பார்வையிட்டார் கனேடிய தூதுவர் எரிக்ஸ் வோல்ஸ்



யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக்ஸ் வோல்ஸ் இன்றைய தினம் யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சிக்கூடத்தை பார்வையிட்டார்.

மேலும் பனை அபிவிருத்தி சபையினுடைய பனை சார் உற்பத்தி பொருட்களினையும் பார்வையிட்டார்.

மேலும் பனை அபிவிருத்தி சபையினுடைய எதிர்கால செயற்பாடுகள், புதிய பனைசார் உற்பத்திப் பொருட்கள் கண்டுபிடிப்பதற்கான நிதிஉதவிகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் உதவிப் பணிப்பாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர், மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## பொட்டாசியத்தை அருந்தி 40 வயது நபர் தற்கொலை

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நகைப் பட்டறையில் பணியாற்றும் 40 வயதான ஒருவர் பொட்டாசியம் அருந்தி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டுவிலில் உள்ள அவரது வீட்டிலேயே கடன் பிரச்சினை காரணமாக அவர் இவ்வாறானதொரு தவறான முடிவு எடுத்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## மோடிக்கு சம்பந்தன் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் புதுடில்லியில் எதிர்வரும் 21ஆம் திகதி உத்தியோகபூர்வ சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், மோடிக்கு சம்பந்தன் இந்தக் கடிதத்தை அவசரமாக எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் தமிழ் மக்களின் பாதுகாப்பு, அடையாளம், இருப்பு ஆகியவை இந்தியாவின் பாதுகாப்பிலிருந்து குறிப்பாக அதன் தெற்கு அயல் நாடுகளில் இருந்து பிரிக்க முடியாதவை என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

துரதிஷ்டவசமாக தமிழ் மக்களின் பாதுகாப்பும் இந்தியாவின் பாதுகாப்பும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி 36 வருடங்கள் கடந்தும் மழுப்பலாகவே உள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (க)

## சுகாதார அமைச்சர் கெஹெலியவுக்கு எதிராக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பட்டு வருவதையும், சுகாதாரத் துறையின் கவனக் குறைவான போக்கினாலேயே இவ்வாறான உயிரிழப்புக்கள் இடம்பெற்று வருவதாகவும் எடுத்துக்காட்டி சமூகச் செயற்பாட்டாளர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (த)

## பிரேரணையை எதிர்கொள்ளத் தயார்! ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சவாலுக்குப் பயந்து பொறுப்பிலிருந்து விலகித் தப்பியோடும் நபர் நான் அல்லன். சுகாதாரத்துறை தொடர்பாக திட்டமிட்டுப் பொய்ப் பிரசாரங்களை சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

நான் இதுவரை 8 அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளேன். சுகாதார அமைச்சராக நாட்டில் 22 இலட்சம் மக்களின் சுகாதாரம் தொடர்பான பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளேன், என்றும் அவர் ஊடகங்களுடனான சந்திப்பில் உறுதிபடக் கூறியிருக்கிறார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட - maalaikkathir@gmail.com

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு குழு மோதலையடுத்து தற்காலிகமாக பூட்டு




இரண்டு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தை இன்று தற்காலிகமாக மூடுவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்கள் குழுவிற்குள் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

தற்போது மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தைவிட்டு வெளியேறியதையடுத்து பல்கலைக்கழகத்தைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் நிலவிவரும் அமைதியின்மைக்குத் தீர்வு காணும் வரை பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெயந்த லால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

# எல்ல - வெல்லவாய வீதியில் விபத்து ஒருவர் உயிரிழப்பு - 8 பேர் காயம்



வெல்லவாய வீதியில் இன்று அதிகாலை பேருந்து ஒன்று பள்ளத்தில் பாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

எல்ல - வெல்லவாய வீதியின் ரஹதன்கந்த பகுதியில் இடம்பெற்ற அந்தப் பேருந்து விபத்தில், ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

பேருந்து பயணித்துக்கொண்டிருந்தபோது, திடீரென பள்ளத்திற்குள் பாய்ந்தமையாலேயே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்த 8 பேர் வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

# கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை வைத்தியர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு



கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்தியர்கள் நாளை புதன்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் தீர்வை வழங்கத் தவறியமையினால் குறித்த போராட்டமானது முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கோதுமை மா விலை மாற்றம்

செரண்டிப் மற்றும் பிரிமா கோதுமை மாவின் விலைகளை இன்று செவ்வாய்கிழமை முதல் திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## ஒரு வயதுக் குழந்தையைச் சுட்டுக் கொன்ற 3 வயது சகோதரன்- அமெரிக்காவில் அதிர்ச்சி!




அமெரிக்காவின் கலிபோர்னியாவில் தனது தம்பியை அண்ணன் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டது 3 வயதேயான ஆண் குழந்தை எனவும், துப்பாக்கிச் சூட்டில் இறந்தது துவர் ஒரு வயது பெண் குழந்தை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காவல் நிலையத்திற்கு குழந்தையொன்று அழைப்பை மேற்கொண்டுள்ளது. அழைப்பிற்கு பதிலளித்து சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது, 3 வயது குழந்தை தவறுதலாக ஒரு வயது சகோதரியின் தலையில் சுட்டுள்ளமை தெரியவந்தது.

துப்பாக்கிச் சூட்டுக் காயத்தால் சுயநினைவின்றி இருந்த குழந்தையை மீட்டு பலோமர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், அங்கு குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் எற்கனவே இறந்துவிட்டதாக அறிவித்தனர், என்று காவல்துறையினர் கூறியுள்ளனர். சம்பவம் நடந்த இடத்தில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியை கண்டெடுத் துள்ளனர். குழந்தைகளின் பெயர் விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை. பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கட்டுமானத் தொழிலாளர்களை ஈர்ப்பதற்கு விசா கட்டணத்தைக் குறைத்தது பிரித்தானியா

வெளிநாட்டுக் கட்டுமானத் தொழிலாளர்களை ஈர்ப்பதற்காகப் பிரித்தானியா விசா விதிகளைத் தளர்த்தியுள்ளது.

கட்டுமானப் பணிகளுக்கான வேலையாட்கள் பற்றாக்குறை நிலவுவதால், வெளிநாட்டிலிருந்து பணியாளர்களை எளிதாகக் கொண்டுவருவதற்காக குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, மேசன், தச்சன், கூரை வேலை செய்தல், வர்ணப் பூச்சு போன்ற தொழிற் துறையினைச் சார்ந்தோருக்கு சில மாற்றங்களின் கீழான விசாக்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



பிரித்தானியா சில துறைகளில் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, முதலாளிகளும் வெளிநாட்டிலிருந்து தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.

இதனையடுத்து, நேற்று பிரித்தானிய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், புதிய வேலைவாய்ப்புக்களுக்கு ஆட்களைச் சேர்ப்பது முக்கியமான தேசிய உள்கட்டமைப்பை வழங்குவதற்கும், தொடர்புடைய தொழில்களின் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த தொழிலுக்காக விண்ணப்பிப்பவர்கள் வேலையின் வழக்கமான கட்டணத்தில் 80 சதவீதத்தினைச் செலுத்தலாம் எனவும், விசாவிற்கு தகுதி பெறலாம் என்றும் பிரித்தானிய அரசாங்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், விண்ணப்பதாரர்களுக்கு வேலை வழங்குநரிடமிருந்து வேலைக்கான நியமனமும் ஆங்கில மொழித் தேவையைப் பூர்த்தி செய்யும் ஆற்றலும் இருக்க வேண்டும் எனவும் தெரவிக்கப்பட்டுள்ளது. (மி)

## சீனாவைத் தாக்கிய பலத்த சூறாவளி மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றம்



சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் பலத்த சூறாவளித் தாக்கம் ஏற்பட்டுள்ளது. மணிக்கு 140 கிலோமீற்றர் வேகத்தில் குறித்த சூறாவளி தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெற்கு சீனாவைத் தாக்கிய அந்தச் சூறாவளி "தாலிம் புயல்" எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது.

சூறாவளியின் தாக்கத்திற்குள், ஏறக்குறைய 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சூறாவளித் தாக்கத்தையடுத்து, விமானங்கள் மற்றும் ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இன்று சூறாவளியின் வேகம் குறைவடைந்து வியட்நாமை நோக்கி நகரும் என சீன வானிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, வியட்நாமின் பல மாகாணங்களில் இருந்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுமார் 30 ஆயிரம் பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். (மி)

## பென்சில்வேனியாவில் திடீரென கொட்டித் தீர்த்த மழை - ஐவர் பலி

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் திடீரெனப் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பென்சில்வேனியாவில் உள்ள புறநகர்ப் பகுதிகளில், நேற்று ஒரு மணி நேரத்தில் 175 மில்லிமீற்றர் அளவில் மழை பெய்ததால், வீதியில் 5 அடி உயரம் வரை தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியுள்ளது.


எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த வெள்ளத்தில் அவ்வழியால் பயணித்த 11 கார்கள் சிக்கிக்கொண்டன.

இதுவரையில், வெள்ளத்தில் சிக்கி இறந்த 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அதில் 2 பெண்கள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளத்தில் சிக்கிய ஏனையோரைத் தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (மி)



## ரஷ்யப் போர் விமானம் கடலில் வீழ்ந்து விபத்து



ரஷ்யாவில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போர் விமானம் ஒன்று கடலில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

தெற்குப் பகுதியில் உள்ள கிராஸ்டோனர் என்ற இடத்தில் சு-25 என்ற தரைவழித் தாக்குதல் விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. அதன்போது ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக விமானம் கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விமான விபத்து இடம்பெறப்போவதை உணர்ந்த விமானி, அவசரமாக விமானத்தில் இருந்து வெளியேறிய அடுத்த சில நொடிகளில் அந்தப் போர் விமானம் அசோவ் கடலில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான விமானத்தை 1980 களில் இருந்து ரஷ்யா பயன்படுத்தி வருவதாகவும், உக்ரைனுடனான போரில் அதிக தடவைகள் அது பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மி)

## நிபந்தனைகளை இதுவரை நிறைவேற்றாததால் தானிய ஒப்பந்தத்தலிருந்து ரஷ்யா விலகியது

உலகளாவிய உணவு நெருக்கடியைத் தணிக்கும் நோக்கத்துடன் 'கருங்கடல் தானிய ஒப்பந்தம்' எற்படுத்தப்பட்டது. தானியங்களை பெருமளவில் ஏற்றுமதி செய்யும் நாடு உக்ரைன். உலகின் பல நாடுகள் உக்ரைனின் தானியங்களை பெரிதும் நம்பியிருக்கின்றன.

ரஷ்ய - உக்ரைன் போரில் உக்ரைனின் துறைமுகங்கள் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டன. இதனால், தானிய ஏற்றுமதி குறைந்து மிகப் பெரிய உணவு நெருக்கடி உருவாகியது.

கடந்த வருடம் ஜூலை மாதம் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் துருக்கியின் முயற்சியால் ரஷ்யா - உக்ரைன் மோதலால் தேக்கி வைக்கப்பட்ட உக்ரேனிய தானியங்களை பாதுகாப்பாக ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதன் மூலம் உலகளாவிய உணவு நெருக்கடியைத் தணிக்கும் நோக்கத்துடன் "கருங்கடல் தானிய ஒப்பந்தம்"எற்படுத்தப்பட்டது. அந்த உடன்படிக்கையில் சில நிபந்தனைகளுடன் ரஷ்யா பங்கேற்றது.

இந்த ஒப்பந்தம் காலாவதியாகி மீண்டும் இரு முறை புதுப்பிக்கப்பட்டது. ஆயினும், கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை நீட்டிப்பதற்கான நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை என்று பல மாதங்களாக ரஷியா கூறி வந்தது.

இந்த நிலையில் மூன்றாவது முறையாக நேற்று அந்த ஒப்பந்தம் காலாவதியாக இருந்த நிலையில், தமது நாடு தொடர்பான கருங்கடல் நிபந்தனைகள் இதுவரை செயல்படுத்தப்படவில்லை, எனவே அதிலிருந்து விலகுவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் சொந்த விவசாய ஏற்றுமதிகளுக்கு உதவும் வகையில் பணம் செலுத்துதல், காப்பீடு மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவற்றை அனுமதிக்கும் ஓர் இணையான ஒப்பந்தத்தை, மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் தடுத்து வைத்திருப்பதாகவும், இதனால் ரஷ்யாவிற்கு பெரும் சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அந்த நாடு தொடர்ந்து குற்றம் சாட்டி வந்தது.

"நிபந்தனைகள் நிறைவேறியவுடன், மீண்டும் கருங்கடல் தானிய ஒப்பந்தத்தில் பங்கேற்போம்" என்று ரஷிய அதிபர் விளாடிமிர் புடினின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறியுள்ளார்.

ரஷ்யாவின் இந்த முடிவிற்கு, 'ரஷியா- கிரிமியா இடையே உள்ள பாலத்தின் மீது இரவில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும், உக்ரைன் மீது குற்றம் சாட்டியமையும் தொடர்பில்லாதவை' என்று அவர் மேலும் கூறி உள்ளார்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்பே, ஜனாதிபதி புடின் இந்த முடிவை அறிவித்தார், என்றும் பெஸ்கோவ் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த ஒப்பந்தத்திலிருந்து வியகியதன் பின்னர், உக்ரைனின் தானிய ஏற்றுமதித் துறைமுகத்தின் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## போலந்து விமான நிலையத்தில் விமானம் விபத்து - ஐவர் பலி



போலந்தின் வார்சாவிற்கு அருகிலுள்ள விமான நிலையத்தில் செஸ்னா 208 என்னும் சிறிய ரக விமானமொன்று விமானக் கொட்டகையோடு மோதியதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதாகவும், 7 பேர் காயமடைந்துள்ளதாகவும் போலந்து விமான சேவைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தானது, நேற்று மாலை உள்ளூர் நேரப்படி 5.40 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விபத்து இடம்பெற்ற இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் விமானத்தில் இருந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்ததோடு, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். (மி)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2023இல் வெளியிடப்பெற்றது.